# தேச பக்தி

DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்: 094 ★05.08.2026 ★தமிழ் நாளிதழ் ★புதன்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:094 ★05.08.2026 ★TamilDaily ★Wednesday ★Page-4 ★Price-₹5/- Chennai




## முதல்வர் திறந்து வைத்த ரூ.6.25 கோடி மதிப்பிலான அதிநவீன தொழில்நுட்ப பணிமனை

### நாகப்பாடி பாலிடெக்னிக் கல்லூரியில் மாணவர்களுக்கு புதிய வசதிகள்

தமிழ்நாடு முதலமைச்சர் இன்று (04.08.2026) சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சி வாயிலாக திருவண்ணாமலை மாவட்டம், நாகப்பாடி அரசு பலவகை தொழிற்நுட்பக் கல்லூரியில் ரூ.6.25 கோடி மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள முன்கட்டமைப்பு (PreFabrication) பணிமனை கட்டடத்தை திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நாகப்பாடி அரசு பலவகை தொழிற்நுட்பக் கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் கலந்து கொண்டு புதிய கட்டடத்தையும், அதில் நிறுவப்பட்டுள்ள நவீன தொழில்நுட்ப இயந்திரங்களையும் பார்வையிட்டு அவற்றின் செயல்பாடுகள் குறித்து அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். நிகழ்ச்சியில் போளூர் சட்டமன்ற உறுப்பினர் ஆர். அபிஷேக்கும் கலந்து கொண்டார்.

ரூ.625 லட்சம் மதிப்பீட்டில் 1,428.98 சதுர மீட்டர் பரப்பளவில் இரு தளங்களுடன் கட்டப்பட்டுள்ள இந்த அதிநவீன பணிமனை கட்டடம், தொழில்நுட்பக் கல்வி பயிலும் மாணவர்களின் திறன்களை மேம்படுத்தும் வகையில் பல்வேறு நவீன வசதிகளுடன் உருவாக்கப்பட்டுள்ளது.

தரைத்தளத்தில் தரக்கட்டுப்பாட்டு அறை, பொருள்சேர் உற்பத்தி அறை, உற்பத்தி ஆய்வகம் மற்றும் பணிப்பகுதி, குழாய் வேலைப்பகுதி, ரோபோடிக்ஸ் பணிமனை, கார் லிப்ட், ஆட்டோ எம்.ஆர்.ஓ. பணிமனை, பேட்டரி பணிமனை, உற்பத்தி செயல்படுத்தல் அமைப்பு பணிமனை, சேமிப்பு அறை, மாற்றுத்திறனாளிகளுக்கான கழிப்பறை மற்றும் மாணவர், மாணவியருக்கான தனித்தனி கழிப்பறைகள் உள்ளிட்ட வசதிகள் 1,060.58 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன.

முதல் தளத்தில் சேவையக அறை, பிடிடி/பிஎல்எம் வகுப்பறை, பிவிஏ/மெஷினிங் ஆய்வகம், ஐஓடி வகுப்பறை, ஏஐ/எம்எல் வகுப்பறை, வீசாட் வகுப்பறை மற்றும் காணொலிகலந்தாய்வுஅறைஉள்ளிட்டநவீனதொழில்நுட்ப வசதிகள் 368.40 சதுர மீட்டர் பரப்பளவில் அமைக்கப்பட்டுள்ளன.

மேலும், ஒரு மணி நேரத்திற்கு 250 லிட்டர் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கும் வசதி, மாற்றுத்திறனாளிகளுக்கான சாய்தளப் பாதை (Ramp), ஆழ்துளைக் கிணறு, தீயணைப்பு பாதுகாப்பு வசதிகள் மற்றும் அணுகுசாலை உள்ளிட்ட அடிப்படை கட்டமைப்பு வசதிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன.

இந்த புதிய பணிமனை மூலம் தொழில்துறை தேவைகளுக்கு ஏற்ப மாணவர்கள் அதிநவீன தொழில்நுட்பங்களில் நேரடி பயிற்சி பெற்று திறன் மேம்பாடு அடைவதற்கு வழிவகுக்கும் என அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிகழ்ச்சியில் நாகப்பாடி அரசு பலவகை தொழிற்நுட்பக் கல்லூரி முதல்வர் அலமேலு, செங்கம் வட்டாட்சியர் முருகன் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

## தமிழக சட்டப்பேரவை இன்று கூடுகிறது: தவெக அரசின் முதல் பட்ஜெட் தாக்கல்

தமிழக சட்டப்பேரவை இன்று கூடுகிறது. அப்போது, தவெக அரசின் நடப்பு நிதி ஆண்டுக்கான முதல் பொது பட்ஜெட் தாக்கல் செய்யப்படுகிறது. நாளை வேளாண் பட்ஜெட் தாக்கலாகிறது.

தமிழகத்தில் நடந்து முடிந்த சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று சில கூட்டணி கட்சிகளின் ஆதரவுடன் தவெக ஆட்சி அமைத்துள்ளது. அக்கட்சியின் தலைவர் விஜய், புதிய முதல்வராக கடந்த மே 10ம் தேதி பதவி யேற்றார். புதிதாக பொறுப்பேற்ற தவெக அரசின் முதல் சட்டப்பேரவைக் கூட்டம் ஆளுநர் உரையுடன் கடந்த ஜூன் 19ம் தேதி தொடங்கியது. அதன்பின் ஆளுநர் உரைக்கு நன்றி தெரிவிக்கும் தீர்மானத்தின் மீதான விவாதம் ஜூன் 23ம் தேதி வரை நடத்தப்பட்டு, பின்பு சட்டப்பேரவை தேதி குறிப்பிடாமல் ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் நடப்பு நிதி ஆண்டுக்கான (202627) பொது பட்ஜெட்டைத் தாக்கல் செய்வதற்காகச் சட்டப்பேரவை இன்று (ஆகஸ்ட் 5) கூடுகிறது. அதன்படி காலை 10 மணிக்கு கூடும் கூட்டத்தில், பொது பட்ஜெட்டை நிதியமைச்சர் மரியவில்சன் தாக்கல் செய்கிறார். நாளை வேளாண் பட்ஜெட்டை துறை அமைச்சர் வினோத் தாக்கல் செய்கிறார். அடுத்த சில நாட்கள் இரண்டு பட்ஜெட் மீதான விவாதமும், அமைச்சர்களின் பதிலுரையும் இடம்பெறும். பேரவைக் கூட்டத்தை எத்தனை நாட்கள் நடத்துவது என்பது இன்று மதியம் நடைபெறும் அலுவல் ஆய்வுக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டு அறிவிக்கப்படும்.

தவெக அரசின் முதல் பட்ஜெட் என்பதால் திட்டங்கள் பொதுமக்களை கவரும் வகையில் இடம் பெறும் என எதிர்பார்க்கப்படுகிறது. அந்த வகையில் மகளிர் உரிமைத் தொகை உயர்வு, இளைஞர்களுக்கான வேலைவாய்ப்புத் திட்டங்கள் உட்பட பல்வேறு அறிவிப்புகள் இடம்பெறலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பட்ஜெட் மீதான விவாதம் முடிந்தவுடன் தொடர்ந்து துறைகள் வாரியாக மானியக் கோரிக்கை மீதான விவாதமும் அமைச்சர்களின் பதிலுரையும் இடம்பெறும். இதற்காக சுமார் ஒரு மாதம் வரை சட்டப்பேரவைக் கூட்டம் நடத்த வாய்ப்புகள் உள்ளதாக கூறப்படுகிறது.

## எஸ்சி, எஸ்டி மேம்பாட்டு நிதியை முழுமையாக பயன்படுத்த வேண்டும்: முதல்வர் விஜய் அறிவுறுத்தல்



எஸ்சி, எஸ்டி மேம்பாட்டுக்காக ஒதுக்கப்படும் நிதியை முழுமையாகப் பயன்படுத்துவதுடன், திட்டங்களின் செயல்பாடுகளை அதிகாரிகள் தீவிரமாகக் கண்காணிக்க வேண்டும் என்று முதல்வர் விஜய் அறிவுறுத்தினார்.

தமிழகத்தில் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினருக்காக ஒதுக்கப்படும் நிதி முழுமையாக சென்றடைவதை உறுதி செய்யும் வகையில், ‘தமிழ்நாடு மேம்பாட்டு செயல் திட்ட சட்டம்’ கடந்த 2024 மே 29ம் தேதி அமல்படுத்தப்பட்டது. இந்த சட்டத்தின்படி எஸ்சி, எஸ்டி துறைக்கு ஒதுக்கப்படும் நிதி முறையாகச் செலவிடப் படுகிறதா என்பதை கண்காணிக்க முதல்வர் தலைமையில் மாநில மன்றம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த மன்றத்தின் 202627ம் நிதியாண்டுக்கான முதல் கூட்டம், முதல்வர் விஜய் தலைமையில் சென்னை தலைமைச் செயலகத்தில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதல்வர் விஜய் பேசியதாவது: எஸ்சி, எஸ்டி மேம்பாட்டுச் செயல் திட்டத்தின் கீழ் ஒதுக்கப்படும் நிதியை எளிய மக்களின் பயன்பாட்டுக்கு முழுமையாக உபயோகிக்க வேண்டும்.

இதன் செயல்பாடுகளை தொடர்ந்து அதிகாரிகள் கண்காணிக்க வேண்டும். குறிப்பாக இத்திட்டங்களை செயல்படுத்தும் துறைகளின் மாதாந்திர செலவின விவரம், பணி முன்னேற்ற அறிக்கை மற்றும் பயனாளிகளின் விவரத்தை www adtwdap.tn.gov.in என்ற வலைதளத்தில் பதிவுசெய்ய வேண்டும்.

மேலும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் முன்னேற்றத்துக்கு இடையூறாக உள்ள தடைகளைக் கண்டறிந்து, அவற்றை களைவதற்கான பரிந்துரைகளை தெரிவிக்க வேண்டும். அதற்கான புதிய திட்டங்களை அனைத்து துறைச் செயலர்கள் உருவாக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

## “இரட்டை அர்த்தமில்லை; ஒரே அர்த்தத்தில் தான் பேசினேன்” உதயநிதி விளக்கம்



காவிரி பிரச்சினை தொடர்பாக இரட்டை அர்த்தத்தில் பேசவில்லை. ஒரே அர்த்தத்தில் தான் பேசினேன் என எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி தெரிவித்தார்.

தஞ்சாவூர் மாவட்டம் செங்கிப்பட்டி காவல் நிலையத்தில் விசாரணை முடிந்த பின் விடுக்கப்பட்ட அவர், சென்னை செல்லும் வழியில் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் நேற்று இரவு கூறியது: தஞ்சாவூரில் விவசாயிகளுக்கு ஆதரவாக திமுக சார்பில் நடைபெற்றற ஆர்ப்பாட்டத்தில், இந்த ஆட்சியில் விவசாயிகளுக்கு செய்த துரோகங்களை பற்றித்தான் பேசினேன்.

தண்ணீர் தர மறுக்கும் கர்நாடகாவை எதிர்த்து பேசவும் தைரியம், தெம்பு இல்லை. எனவே முதல்வர் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும்.

நாங்கள் கேட்கும் எந்தக் கேள்விக்கும் பதில் சொல்ல முடியாத திராணியில்லாத டம்மி முதல்வர் நமக்கு வாய்த்துள்ளார்.

அதையெல்லாம் விட்டுவிட்டு நான் பேசாத ஒரு விஷயத்தை ‘கட் காபி பேஸ்ட்’ செய்து சில விஷயங்களை சேர்த்துள்ளனர். இந்த அரசின் கொள்கையே திசைத் திருப்பும் யுக்தி தான்.

நான் பேசாத விஷயத்தை திரித்து பரவவிட்டுள்ளனர். போலீஸார் கைது செய்ய வந்தனர். நானும் முழு ஒத்துழைப்பு அளித்தேன். நீதிமன்றத்தில் அரசு வழக்கறிஞர் கைது செய்யும் நோக்கம் கிடையாது, விசாரணைக்கு அழைத்துச் செல்கிறோம் என்றார். போலீஸார் முறையாக நடத்தவில்லை.

நான் எந்தவிதமாக தவறான எண்ணத்தில், புண்படுத்த வேண்டும்; பெண்களை தாழ்த்திப் பேச வேண்டும் என்ற எண்ணம் துளிக்கூட கிடையாது. என்குடும்பம் என்னை அப்படி வளர்க்கவில்லை. எனக்கு திருமணமாகி மனைவி, ஒரு பெண் குழந்தை, தங்கை உள்ளனர். தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு தாய்மாரும் எனது தாயாக, தங்கையாக நினைக்கிறேன். பொய் வழக்கு போட்டு அச்சுறுத்த நினைத்தனர். அதற்கு பயப்படும் ஆள் நான் இல்லை. சில தலைவர்கள் நான் பேசியதை பார்க்காமல் ஆராயாமல் நான் தவறாக பேசியதாக கண்டனம் தெரிவித்துள்ளனர். அது எனக்கு வருத்தமாக உள்ளது. என்னை கைது செய்ததற்காக நான் பயப்பட மாட்டேன். நான் இரட்டை அர்த்தத்தில் பேசவில்லை. ஒரே அர்த்தத்தில் தான் பேசினேன். தொடர்ந்து பேசுவேன். இந்த அரசுக்கு நிச்சயம் மக்கள் பதிலை தருவார்கள். இவ்வாறு அவர் கூறினார்.

## கர்நாடக அணைகளில் இருந்து திறந்துவிடப்பட்ட காவிரி நீர் தமிழக எல்லையை தொட்டது

### ஒகேனக்கல்லில் ஆர்ப்பரித்துக் கொட்டும் தண்ணீர்



கர்நாடக மாநிலத்திலுள்ள அணைகளில் இருந்து காவிரியில் திறக்கப்பட்ட தண்ணீர் மாநில எல்லையான ஒகேனக்கல்லை அடுத்த பிலிகுண்டுலுவில் வந்தடைந்தது. நீர்வரத்து படிப்படியாக அதிகரித்து விநாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாக உயர்ந்தது. நீர்வரத்து அதிகரித்துள்ளதால் ஒகேனக்கல் ஆற்றில் பரிசல்கள் இயக்க மாவட்ட நிர்வாகம் தடைவிதித்துள்ளது.

காவிரி நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்து வரும் மழையால் கர்நாடகா மாநில அணைகள் வேகமாக நிரம்பி வருகின்றன. கபினி அணை முழு கொள்ளளவை எட்டிய நிலையில் கடந்த 1ம் தேதி முதல் உபரிநீர் காவிரியாற்றில் வெளியேற்றப்பட்டு வருகிறது.

இவ்வாறு திறக்கப்பட்ட தண்ணீர் ஒகேனக்கல்லை அடுத்துள்ள தமிழக எல்லையான பிலிகுண்டுலுவுக்கு நேற்று அதிகாலை வந்து சேர்ந்தது.

இதன்படி நேற்று முன்தினம் விநாடிக்கு 500 கனஅடியாக பதிவான நீர்வரத்து நேற்று அதிகாலை 6 மணி அளவீட்டின்போது விநாடிக்கு 1,000 கனஅடியாக உயர்ந்தது. தொடர்ந்து 7 மணியளவில் விநாடிக்கு 8,000 கனஅடியாகவும், காலை 10 மணியளவில் விநாடிக்கு 18 ஆயிரம் கனஅடியாகவும் உயர்ந்தது.

நீர்வரத்து அதிகரித்துள்ளதால் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்புக் கருதி ஒகேனக்கல் காவிரியாற்றில் பரிசல் இயக்க மாவட்ட நிர்வாகம் தற்காலிக தடை அறிவித்துள்ளது. இதனால், நேற்று ஒகேனக்கல் சுற்றுலா வந்தவர்கள் ஏமாற்றம் அடைந்தனர். அதேபோல, நீர்வரத்து விநாடிக்கு 20 ஆயிரம் கனஅடியைக் கடக்கும்போது ஆறு மற்றும் அருவிகளில் குளிக்கவும் தடை அறிவிக்கப்படும்.

நேற்று முன் தினம் வரை சிறிதளவு தண்ணீருடன் காணப்பட்ட பிரதான அருவி பகுதியிலும், வறண்டு காணப்பட்ட ஐவர் பாணி என அழைக்கப்படும் ஐந்தருவி பகுதியிலும் தற்போது வெள்ளம் ஆர்ப்பரித்துச் செல்கிறது. புதிதாக வந்து சேர்ந்துள்ள தண்ணீர் என்பதால் ஒகேனக்கல்லில் கலங்கலாக செந் நிறத்தில் தண்ணீர் சீறிப்பாய்கிறது.

# பாடியநல்லூர் ஸ்ரீ பவானி அம்மன் ஆலயத்தில் 29ம் ஆண்டு ஆடிதிருவிழா

## 9ம் ஆண்டு தீமிதி திருவிழா

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ பவானிஅம்மன் ஆலயத்தில் 29ஆம் ஆண்டு ஆடி திருவிழா மற்றும் 9ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் தலைவர் கோவிந்தசாமி, செயலாளர் ஆலயசாமி, பொருலாளர் தேவராஜ், துணைத்தலைவர்கள் பரசுராமன், ஆலயசாமி, முனுசாமி, பார்த்திபன் துணை செயலாளர்கள் ஆலயசாமி, திருமலை உள்ளிட்ட ஆலய அனைத்துநிலை நிர்வாகிகள் மற்றும் கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது.





நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் பந்தகால் நடுதல், பால்குடம் எடுத்தல், காப்புகட்டுதல், பூங்கரகம் எடுத்தல், கங்கை நீர் திரட்டுதல், அக்னி கப்பறை எடுத்தல் போன்றவை நடைபெற்றது. பின்னர் சுமார் 200க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர்.

இதனத் தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேள தாள வானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது.

இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராம பொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள்சார்பில்பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.முடிவில் அம்மனுக்கு சுமங்கலி பூஜை, கும்பம் படையல்பூஜை நடைபெற்றது.




### "உதயநிதியை கைது செய்!":

# தெற்கு மாவட்ட செயலாளர் கே. பாரதிதாசன் தலைமையில் திருவண்ணாமலையில் தவெகவின் ஆக்ரோஷ ஆர்ப்பாட்டம்

தஞ்சாவூரில் நடைபெற்ற திமுக ஆர்ப்பாட்டத்தில் தமிழக முதல்வர் ஜோசப் விஜய் குறித்து திமுக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின்பேசியதாகக் கூறப்படும் கருத்துகளுக்கு எதிர்ப்பு தெரிவித்து, அவரை கைது செய்ய வலியுறுத்தி தமிழக வெற்றிக் கழகம் (தவெக) சார்பில் திருவண்ணாமலையில் செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

திருவண்ணாமலை அண்ணாசிலை அருகே நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு தவெக தெற்கு மாவட்ட செயலாளர் கே. பாரதிதாசன் தலைமை வகித்தார். மாநில பொறுப்பாளர்கள், மாவட்ட, நகர, ஒன்றிய நிர்வாகிகள், மகளிரணி, இளைஞரணி உள்ளிட்ட பல்வேறு அணிகளைச் சேர்ந்த நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் திரளாக பங்கேற்றனர்.

ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றவர்கள் கைகளில் பதாகைகளை ஏந்தி, "உதயநிதியை கைது செய்", "பெண்களை இழிவுபடுத்தும் பேச்சை அனுமதிக்க முடியாது" உள்ளிட்ட முழக்கங்களை எழுப்பி தங்களது கண்டனத்தை வெளிப்படுத்தினர்.

இதனைத் தொடர்ந்து, மாவட்ட மாநகர மகளிரணி பொறுப்பாளர் எம். துர்காதேவி தலைமையில் தவெக நிர்வாகிகள் திருவண்ணாமலை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலகத்திற்கு சென்று, உதயநிதி ஸ்டாலின் மீது சட்டப்படி நடவடிக்கை எடுத்து உடனடியாக கைது செய்ய வேண்டும் என்று வலியுறுத்தி காவல்துறை அதிகாரிகளிடம் மனு அளித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட இணைச் செயலாளர் எஸ். கலைச் செல்வன், மாவட்ட பொருளாளர் கே. இளங்கோவன், கமலாபீடம் நிறுவனர் சீத்தா சீனுவாசன், மாமன்ற உறுப்பினர்கள் டாக்டர் எம். பழனி, சாந்தி சரவணன், மாவட்ட மாநகர மகளிரணி பொறுப்பாளர் எம். துர்காதேவி, மாவட்ட மகளிரணி செயலாளர் அ. பூர்ணிமா உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தை முன்னிட்டு அண்ணாசிலை பகுதி மற்றும் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அலுவலக வளாகத்தில் பலத்த போலீஸ் பாதுகாப்பு போடப்பட்டிருந்தது.

போராட்டம் அமைதியான முறையில் நிறைவடைந்தது.







### தேனி தொழில்நுட்பக் கல்லூரியில்

# ரூ.6.25 கோடியில் சிறப்பு திறன்மிகு மையக் கட்டிடம் திறப்பு

தமிழக முதல்வர் காணொளி வாயிலாக பல்வேறு புதிய கட்டிடங்களை திறந்து வைத்ததை தொடர்ந்து, தேனி மாவட்டம் கோட்டூர் அரசு பலவகை தொழில்நுட்பக் கல்லூரி வளாகத்தில் ரூ. 6.25 கோடி மதிப்பீட்டில் 4.0 தரத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிய சிறப்பு திறன்மிகு மையக் கட்டிடம் பொதுமக்கள் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டது. தேனி மாவட்ட ஆட்சியர் வைத்திநாதன் அவர்களின் ஆலோசனையின் பேரில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் ப. ராஜகுமார் குத்துவிளக்கேற்றி புதிய கட்டிடத்தை திறந்து வைத்தார். இந்நிகழ்வில் கல்லூரி முதல்வர் சி.சரவணக்குமார், தொழில்நுட்பக் கல்வி கோட்ட உதவி பொறியாளர் மணிகண்டன், திண்டுக்கல் உப கோட்ட அலுவலர் சரவணக்குமார், ஆட்சியரின் நேர்முக உதவியாளர் சுந்தரபாண்டியன், மின்னியல் உதவி பொறியாளர் ம.மேரி பப்பித்தா, கோட்டூர் ஊராட்சி மன்றத் தலைவர் சகாயஷீலா, துணை தலைவர் ராமலெட்சுமி மற்றும் கல்லூரி பேராசிரியர்கள் பலர் கலந்து கொண்டனர். திறப்பு விழாவை தொடர்ந்து, புதிய கட்டிடத்தைப் பார்வையிட்டு ஆய்வு செய்த மாவட்ட வருவாய் அலுவலர், ஒவ்வொரு அறையிலும் அமைக்கப்பட்டுள்ள அதிநவீன உபகரணங்கள் மற்றும் பாதுகாப்பு கண்காணிப்பு கேமராக்களின் செயல்பாடுகள் குறித்து நேரில் ஆய்வு செய்தார். அப்போது உபகரணங்களின் பயன்பாடுகள் மற்றும் சிறப்பம்சங்கள் குறித்து கல்லூரி முதல்வர் அவருக்கு விரிவாக விளக்கமளித்தார்.





பழனி அடிவாரம் ஸ்ரீ போகர் புலிப்பாணி சித்தர் ஆசிரமத்தில், ஆடி 18 முன்னிட்டு, மிகவும் பழமையான ஓலைச்சுவடிகளுக்கு, ஆடி 18 யொட்டி மலர் வழிபாடும், சிறப்பு பூஜையும் நடைபெற்றது. இதை பழனி ஆதினம் போகர் சிவானந்த புலிப்பாணி பாத்திர சுவாமிகள், தொடங்கி வைத்து சிறப்பு பூஜை செய்தார். அதன் பின்பு அங்குள்ள தொட்டச்சி அம்மனுக்கு வளையல்கள் வைத்து சிறப்பு பூஜை செய்யப்பட்டது. இதில் சண்முகானந்தா என்ற ஜம்பு சாமிகள், இளைய பட்டம் செல்வநாதன், மற்றும் யோகநாதன் டாக்டர் பன்னீர்செல்வம், டாக்டர் கல்பனா உட்பட ஏராளமான ஒரு பங்கேற்றனர்

# பம்மதுகுளம் ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 27ம் ஆண்டு ஆடிமாத தீமிதி திருவிழா

மாதவரம் தொகுதி வில்லிவாக்கம் ஒன்றியம் பம்மதுகுளம் கிராமத்தில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ கெங்கையம்மன் ஆலயத்தில் 27ஆம் ஆண்டு தீமிதி திருவிழா ஆலய நிர்வாகிகள் செயலாளர் பத்மநாபன், பொருளாளர் துரைகனகவேல், துணைத்தலைவர் கனகராஜ், துணை செயலாளர் கர்ணால் சூரியா, கமிட்டி தலைவர் கவியரசன் மற்றும் ஆலய பூசாரி வளர்மதி, ஆன்மீக சேவகர்கள் அசோகன், ஏழுமலை, சேகர், ஜெயராமன், திருமலை, கமிட்டி உறுப்பினர்கள் நாகராஜ், நந்தி, விஜயன், திருநாவுக்கரசு, பன்னீர்தாஸ், சுரேஷ் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் ஏற்பாட்டில் வெகு சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் கணபதி பூஜையுடன் அம்மன் காப்பு, கலசகாப்பு, கரககாப்பு, குமாரமக்கள் காப்பு, பூங்கரகம் எடுத்தல், பால்குடம் எடுத்தல், திருவிளக்கு பூஜை, தாய்வீட்டு சீதனம் எடுத்தல், கூழ்வார்த்தல், அலகுபானை எடுத்தல் போன்றவை நடைபெற்றது.

பின்னர் சுமார் 200க்கும் மேற்பட்ட காப்புகட்டிய பக்தர்கள் தீகுண்டத்தில் இரங்கி தங்களின் நேர்த்திகடனை பூர்த்தி செய்தனர். இதனைத்தொடர்ந்து அம்மன் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாளவானவேடிக்கைவுடன் திருவீதி உலா நடைபெற்றது. இத்திருவிழாவிற்கு ஆலய பொறுப்பாளர்கள், சுற்றுவட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்துகொண்டு சுவாமி தரிசனம் செய்தனர். மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கினர்.







# கலசப்பாக்கத்தில் வளர்ச்சிப் பணிகள்; மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தீவிர ஆய்வு

கலசப்பாக்கத்தில் வளர்ச்சிப் பணிகளை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் தீவிர ஆய்வு ரேஷன் கடை முதல் பள்ளி, மருத்துவமனை, அங்கன்வாடி, இலங்கைத் தமிழர் குடியிருப்பு வரை பல்வேறு துறைகளின் பணிகள் நேரில் ஆய்வு

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க், கலசப்பாக்கம் வட்டாரத்தில் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் மற்றும் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகளை செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். ஆய்வின்போது பணிகளை தரமாகவும், விரைவாகவும் நிறைவேற்ற சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார். முதலில், சிங்காரவாடி நியாய விலைக் கடையில் பொருட்களின் இருப்பு, தரமான பொருட்கள் பொதுமக்களுக்கு வழங்கப்படுகிறதா, விநியோகப் பதிவேடுகள் முறையாக பராமரி க்கப்படுகிறதா என்பன குறித்து ஆய்வு செய்தார்.

அதனைத் தொடர்ந்து, கடலாடி ஆரம்ப சுகாதார நிலையத்தில் ரூ.65 லட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் கூடுதல் கட்டிடப் பணிகளை பார்வையிட்டு ஆய்வு செய்த அவர், பணிகளை விரைந்து முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். மேலும், மருத்துவமனையின் செயல்பாடுகள், மருந்தகத்தில் மருந்துகள் இருப்பு, பொது சிகிச்சைப் பிரிவு, பிரசவ அறை உள்ளிட்ட பிரிவுகளை ஆய்வு செய்து, மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் நோயாளிகளை கனிவுடன் அணுகுகிறார்களா என்பதையும் மருத்துவமனைக்கு வந்திருந்த பொதுமக்களிடம் கேட்டறிந்தார்.

பின்னர், கோயில் மாதிமங்கலத்தில் ரூ.10 லட்சம் மதிப்பீட்டில் விபிகிராம் (ஜி) திட்டத்தின்கீழ் நடைபெற்று வரும் குளம் வெட்டும் பணிகளையும், ரூ.7 லட்சம் மதிப்பீட்டில் நாற்றங்கால் பண்ணையில் விதை விதைக்கும் பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்தார். தென்மாதிமங்கலம் அரசு உயர்நிலைப் பள்ளியில் வகுப்பறைகளுக்குச் சென்று மாணவ, மாணவிகளின் கற்றல் திறன் மற்றும் கல்விச் செயல்பாடுகளை ஆய்வு செய்தார்.

மேலும், பள்ளி சத்துணவுக் கூடத்தில் மாணவர்களுக்கு வழங்கப்படும் உணவின் தரம், சுவை மற்றும் உணவுப் பொருட்களின் இருப்பு குறித்தும் ஆய்வு மேற்கொண்டார்.

அருணகிரி மங்கலம் அங்கன்வாடி மையத்தில் குழந்தைகளின் கற்றல் மற்றும் வாசிப்புத் திறன், உயரம், எடை பதிவுகள், வருகைப் பதிவேடுகள் முறையாக பராமரிக்கப்படுகிறதா என்பதையும் ஆய்வு செய்தார்.இதனைத் தொடர்ந்து, தோட்டக்கலைத் துறை சார்பில் ஆடிப்பட்டம் விதைத் தொகுப்புகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

பின்னர், மோட்டூர் பகுதியில் ரூ.2.22 கோடி மதிப்பீட்டில் நடைபெற்று வரும் இலங்கைத் தமிழர் குடியிருப்பு வீடுகள் கட்டுமானப் பணிகளை பார்வையிட்டு, பணிகளை விரைவாகவும், தரமாகவும் மேற்கொள்ள அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.





இறுதியாக, கலசப்பாக்கம் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தின் செயல்பாடுகள் மற்றும் பதிவேடுகள் பராமரிப்பு குறித்து ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) சிவநாத், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் : நிர்மலா , கோவிந்தராஜுலு, துணை வட்டார வளர்ச்சி அலுவலர் அருண்குமார் மற்றும் பல்வேறு துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

### தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்தில் பல்வேறு துறைகள் சார்பில்

# முடிவுற்றத் திட்டங்கள் திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார்

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்தில் பல்வேறு துறைகள் சார்பில் முடிவுற்றத் திட்டங்கள் திறந்து வைத்தும், புதிய திட்டங்களுக்கு காணொளி காட்சி வாயிலாக அடிக்கல் நாட்டினார். இதன் தொடர்ச்சியாக திருவள்ளூர் மாவட்டம், ஊத்துக்கோட்டை வட்டம், பூச்சி அத்திப்பேடு ஊராட்சியில் காணொளி காட்சியில் நேரலையில் மாநிலம்முழுவதும்தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியம் சார்பில் ரூ.525.75 கோடி மதிப்பீட்டில் 9 திட்டப்பகுதிகளில் கட்டப்பட்ட 4,260 புதிய




அடுக்குமாடி குடியிருப்புகள் திறப்பு விழாவில் திருவள்ளூர் மாவட்ட பகுதியில் ரூ.156.14 கோடி மதிப்பீட்டில் 1,152 அடுக்குமாடி குடியிருப்புகளை திறந்து வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் வீடுகள் ஒதுக்கீடு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணையை மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கவிதா மற்றும் கும்மிடிபூண்டி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.விஜயகுமார் ஆகியோர் வழங்கினர். தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு கழக இணை மேலாண்மை இயக்குநர் அனாமிகா ரமேஷ், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு கழக தலைமை பொறியாளர் எஸ்.மணிவண்ணன், கண்காணிப்பு பொறியாளர் அரசு, செயற்பொறியாளர் செந்தில் முருக ஜெயக்குமார், திருவள்ளூர் வருவாய் கோட்டாட்சியர் எஸ். ரவிச்சந்திரன், உதவி பொறியாளர்கள், துறை சார்ந்த அலுவலர்கள் உடனிருந்தனர்.



## விடுமுறையை பயனுள்ளதாக மாற்றுங்கள்:

# பெருங்கட்டூர் நூலகத்தில் இளம் வாசிப்பு மன்றம் தொடக்கம்

திருவண்ணாமலை மாவட்டம், வெம்பாக்கம் வட்டம், பெருங்கட்டூர் ஊர்ப்புற நூலகம் சார்பில்மாணவர்களிடையே வாசிப்பு பழக்கத்தை ஊக்குவிக்கும் நோக்கில் இளம் வாசிப்பு மன்றம் தொடக்க விழா நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு பள்ளியின் தலைமை ஆசிரியர் சி. பத்மா தலைமை வகித்தார். ஆசிரியர் கு. தியாகராஜன் முன்னிலை வகித்தார்.

விழாவில், பெருங்கட்டூர் ஊர்ப்புற நூலகத்தின் பொறுப்பு நூலகர் ஜா. தமீம் இளம் வாசிப்பு மன்றத்தை தொடங்கி வைத்து சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், மாணவர்கள் விடுமுறை நாட்களை பயனுள்ள வகையில் பயன்படுத்தி அருகிலுள்ள நூலகங்களுக்கு சென்று சிறுவர் இதழ்கள், கதை நூல்கள் மற்றும் அறிவியல் சார்ந்த புத்தகங்களை வாசிக்கும் பழக்கத்தை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றும், தொடர்ந்து வாசிப்பதன் மூலம் அறிவாற்றல், சிந்தனைத் திறன் மற்றும் மொழித்திறன் மேம்படும் என்றும் தெரிவித்தார்.

இதனைத் தொடர்ந்து மாணவர்கள் நூலகத்தில் உள்ள பல்வேறு புத்தகங்களை ஆர்வமுடன் வாசித்து, வாசிப்பின் முக்கியத்துவத்தை உணர்ந்தனர்.

நிகழ்ச்சியின் நிறைவில் பள்ளி மாணவர் மித்ரன் நன்றி கூறினார்.




# புதிய அரிமா மாவட்டத்தின் முதல் ஆளுநராக வர இருக்கும் லயன் கே சுப்புராஜ் சேவை திட்டங்களை துவக்கி வைத்தார்கள்

பழனி ஏழு அரிமா சங்கங்களின் பதவியேற்பு விழா பழனி டவுன் அரிமா சங்கத்தின் பட்டய தலைவர் லைன் சுந்தரம் அவர்களுடைய ஒருங்கிணைப்பில் லைன் பாபு அவர்களுடைய ஒத்துழைப்போடு மிகச் சிறப்பாக நடத்தப்பட்டது லைன் இன்டர்நேஷனல் இயக்குனர் ஒப்புமை பெற்ற லயன் பாண்டியராஜன் அவர்கள் பதவியேற்பு நிகழ்வை சிறப்பாக நடத்தி வைத்தார்கள் முன்னாள் கூட்டு மாவட்ட துணைத் தலைவர் லைன் டாக்டர் பாரி பரமேஸ்வரன் அவர்கள் புதிய உறுப்பினர்களை அனைத்து சங்கங்களிலும் இணைத்து வைத்தார்கள் உருவாகும் புதிய அரிமா மாவட்டத்தின் முதல் ஆளுநராக வர இருக்கும் லயன் கே சுப்புராஜ் அவர்கள் சேவை திட்டங்களை துவக்கி வைத்தார்கள் அவருடன் இணைந்து மாவட்டத்தின் எதிர்காலம் லைன் டாக்டர் விமல் குமார் அவர்கள் சேவை திட்ட சிறப்பு சொற்பொழிவு ஆற்றினார்கள் லைன் தேனி ராதாகிருஷ்ணன் அவர்களும்லைன்ஆடிட்டர் ரவீந்திரன் அவர்களும் லைன் நல் நாகராஜன் அவர்களும் லைன் போடி நவநீதன் அவர்களும் லைன் தேனி பெஸ்ட் ரவி அவர்களும் மற்றும் திண்டுக்கல் லைன் கணேசன் அவர்களும் மண்டலத் தலைவர் லைன் குணசேகரன் அவர்களும் வட்டார தலைவர் லைன் குட் லைன்ஸ் மணி அவர்களும் வாழ்த்துரை வழங்கினார்கள் சிறப்பான ஏற்பாடுகளை பழனி டைமண்ட்ஸ் அரிமா சங்கத்தின் லைன் ராஜேந்திரன் அவர்கள் தலைமையில் முன் நின்று செய்திருந்தார்கள் இரவு விருந்து ஏற்பாட்டை ஏற்பாடு செய்த பழனி மலை அரிமா சங்கத்தின் பட்டய தலைவர் லைன் சேகர் அவர்களையும் அவரது குழுவினையும் அவர்களின் சிறப்பான செயல்பாடுகளுக்காக எப்படி பாராட்டுவது என்றே தெரியவில்லை அத்தகைய சிறப்பான விருந்தை 650 க்கும் மேற்பட்டவர்களுக்கு அளித்த அவர்களுக்கு பழனி மலை அரிமா சங்கத்தின் சேகர் அவர்களையும் அவரது உறுப்பினர்களையும் வாழ்த்துகிறேன் பாராட்டுகிறேன் இந்த நிகழ்வில்பங்குகொண்டு புதிய தலைவர் செயலாளர் பொருளாளர் மற்றும் நிர்வாகிகளுக்கு பொன்னாடையும் நினைவு பரிசும் வழங்கிய அத்துணை உள்ளங்களையும் வாழ்த்தி வணங்குகிறேன் மொத்தத்தில் இந்த நிகழ்வை சிறப்பாக மாவட்டமே வியந்து எதிர்பார்க்கும் வண்ணம் நடத்திக் காட்டிய லைன் சுந்தரம் அவர்களையும் அவருக்கு துணை நின்ற பாபு அவர்களையும் அவரது சங்க உறுப்பினர்களையும் மேலும் எதற்காக அரும்பாடுபட்ட அரிமாக்களையும் பாராட்டுகிறேன் வாழ்த்துகிறேன் இது போன்ற நிகழ்வு இனிமேலும் வருடம் தோறும் இதைவிட சிறப்பாக அவர்கள் நடத்துவார்கள் என்று நம்பி அவர்களுக்கு எனது மன மகிழ்ச்சியுடன் நிறைந்த வாழ்த்துக்களை கூறிக் கொள்கிறோம்.

# திருவண்ணாமலை ஏகலைவா பள்ளியில் 13 தொகுப்பூதிய பணியிடங்கள் விண்ணப்பிக்க ஆகஸ்ட் 10 வரை அவகாசம் நீட்டிப்பு

## கலெக்டர் வந்தனா கார்க் அறிவிப்பு

திருவண்ணாமலை மாவட்டம், புளியம்பட்டியில் செயல்பட்டு வரும் ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியில் காலியாக உள்ள 13 தொகுப்பூதிய ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களுக்கு விண்ணப்பிக்கும் கால அவகாசம் ஆகஸ்ட் 10, 2026 வரை நீட்டிக்கப்பட்டுள்ளதாக மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

2026–2027 கல்வியாண்டிற்காக ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியில் தொகுப்பூதிய அடிப்படையில் காலியாக உள்ள ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோர் பணியிடங்களை நிரப்ப அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, முதுநிலை பட்டதாரி ஆசிரியர் (SPOKEN ENGLISH) – 1, இளநிலை ஆசிரியர் (SPOKEN ENGLISH) – 1, கலை ஆசிரியர் – 1, இசை ஆசிரியர் – 1, ஆலோசகர்– 1, செவிலியர் – 1, இளநிலைச் செயலக உதவியாளர் – 2, ஓட்டுநர் – 1, மின்சாரம் மற்றும் குழாய் பராமரிப்பு பணியாளர் – 1, தோட்டக்காரர் – 1 மற்றும் உணவுக்கூட உதவியாளர் – 2 என மொத்தம் 13 காலிப்பணியிடங்கள் நிரப்பப்பட உள்ளன.

இப்பணியிடங்களுக்கு மாதந்தோறும் ரூ.10,000 முதல் ரூ.18,000 வரை தொகுப்பூதியம் வழங்கப்படும். தேர்வு செய்யப்படும் பணியாளர்கள் 2026–2027 கல்வியாண்டு முடியும் வரை மட்டுமே தற்காலிக அடிப்படையில் பணியாற்றுவர். பணித்திறன் மற்றும் ஒழுங்கு தொடர்பான குறைபாடுகள் இருந்தால், எவ்வித முன்னறிவிப்புமின்றி பணியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பணியிடங்களுக்கான விண்ணப்பங்கள் முதலில் ஆகஸ்ட் 3, 2026க்குள் பெறப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. தற்போது, பணிநாடுநர்களின் நலனை கருத்தில் கொண்டு விண்ணப்பங்களை ஆகஸ்ட் 10, 2026 வரை ஏற்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



ஆர்வமுள்ள தகுதியான விண்ணப்பதா ரர்கள் தங்களது விண்ணப்பங்களை "ஏகலைவா மாதிரி உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளி, புளியம்பட்டி, திருவண்ணாமலை மாவட்டம்" என்ற முகவரிக்கு ஆகஸ்ட் 10க்குள் அனுப்பி பயன்பெறுமாறு மாவட்ட ஆட்சித் தலைவர் வந்தனா கார்க் கேட்டுக் கொண்டுள்ளார்.

# திருவண்ணாமலை இளைஞர்களுக்கு முக்கிய அறிவிப்பு: அக்னிவீர் இராணுவ ஆள்சேர்ப்பு திரளணி

## தேவையான ஆவணங்களுடன் பங்கேற்க கலெக்டர் வந்தனா கார்க் அறிவுரை

அக்னிவீர்திட்டத்தின் கீழ்விண்ணப்பித்துள்ள இளைஞர்களுக்கான இராணுவ ஆள்சேர்ப்பு திரளணி (ARMY RECRUITMENT RALLY) புதுச்சேரியில் உள்ள இந்திரா காந்தி விளையாட்டு அரங்கில் ஆகஸ்ட் 1 முதல் 10, 2026 வரை நடைபெற உள்ளது என திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் வந்தனா கார்க் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது:

அக்னிவீர் இராணுவ ஆட்சேர்ப்புக்கு விண்ணப்பித்துள்ள திருவண்ணாமலை மாவட்டத்தைச் சேர்ந்த இளைஞர்கள், ஆள்சேர்ப்பு திரளணியில் பங்கேற்கும் போது சமர்ப்பிக்க வேண்டிய ஆவணங்கள் தொடர்பான முழுமையான விவரங்களை திருவண்ணா மலை முன்னாள் படைவீரர்நல அலுவலகத்தின் உதவி இயக்குநரை நேரில் அணுகி பெற்றுக்கொள்ளலாம்.

மேலும், ஆள்சேர்ப்பு நடைமுறைகள் எவ்வித சிரமமும் இன்றி நடைபெற தேவையான அனைத்து அசல் ஆவணங்கள் மற்றும் அவற்றின் நகல்களுடன்குறிப்பிட்டநாளில் ஆஜராக வேண்டும் என்றும், இதன் மூலம் வாய்ப்பை முழுமையாக பயன்படுத்திக் கொள்ளுமாறும் மாவட்ட ஆட்சித்த லைவர் வந்தனா கார்க் அறிவுறுத்தியுள்ளார்.

இறப்புக்கு முன் ரத்த தானம்
இறப்புக்கு பின் கண் தானம்



## நத்தம் அருகே

# தென்னை நார் குடோனில் தீ விபத்து

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே உலுப்பகுடி தென்னை நார் குடோன் திடீரென தீப்பற்றி எரிந்தது நார் கழிவுகள் அதிகம் இருந்ததால், மளமளவென தீ குடோன் முழுவதும் பரவி கொழுந்துவிட்டு எரியத் தொடங்கியது.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த நத்தம் தீயணைப்புத்துறையினர் தண்ணீரைப் அடித்து தீயை அணைக்கும் பணியில் தீவிரமாக ஈடுபட்டனர். காற்றின் வேகம் அதிகமாக இருந்ததால் தீயைக் கட்டுப்படுத்துவதில் சிரமம் ஏற்பட்டது.

இருப்பினும், தீயணைப்பு வீரர்கள் சுமார் ஒரு மணி நேரம் கடுமையாகப் போராடி தீயை முழுமையாகக் கட்டுக்குள் கொண்டு வந்து அணைத்தனர்

# கம்பம் நகராட்சியில் மக்கள் தொகை கணக்கெடுப்பு குளறுபடி

## ஆசிரியர்கள் கடும் மன உளைச்சல்

தேனி மாவட்டம் கம்பம் நகராட்சி பகுதியில் நடைபெற்று வரும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணியில் பல்வேறு குளறுபடிகள்நிலவுவதாக கணக்கெடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள ஆசிரியர்கள் வேதனை தெரிவித்துள்ளனர்.

மக்கள்தொகை கணக்கெடுப்பு என்பது மிக முக்கியமான ஒரு அரசு பணியாகும். இதன் அடிப்படையில் தான் அரசின் நலத்திட்டங்கள், உட்கட்டமைப்பு மேம்பாடுகள், நிதி ஒதுக்கீடுகள் மற்றும் வருங்கால வளர்ச்சி திட்டங்கள் அனைத்தும்திட்டமிடப்பட்டு செயல்படுத்தப்படுகின்றன. எனவே, இதில் எந்தவொரு தகுதியான நபரோ அல்லது குடியிருப்போ விடுபடாமல் துல்லியமாக தரவுகளை சேகரிப்பது மிக அவசியமாகும்.

தற்போது கம்பம் நகராட்சியில் 100க்கும் மேற்பட்ட ஆசிரியர்கள் இந்த கணக்கெடுப்பு பணியில் அமர்த்தப்பட்டுள்ளனர். ஆனால், கணக்கெடுப்பு பணிக்காக வழங்கப்பட்டுள்ள செயற்கைக்கோள் வரைபடத்திற்கும் (SATELLITE MAP), களத்தில் உள்ள உண்மை நிலைக்கும் இடையே பெரும் முரண்பாடுகள் காணப்படுகின்றன. தெற்கு பகுதி என வரைபடத்தில் குறிக்கப்பட்ட இடங்கள் களத்தில் வடக்கில் அமைந்திருப்பதோடு, களத்தில் இல்லாத பகுதிகள் வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளன. களப்பணியை முறையாக மேற்கொள்ளாமல் வரைபடத்தில் தெளிவற்ற முறையில் எல்லைகளை குறியீடு செய்து வழங்கியுள்ளதால், எந்த பகுதிக்கு சென்று கணக்கெடுப்பது என தெரியாமல் ஆசிரியர்கள் தடுமாறும் சூழல் ஏற்பட்டுள்ளது.

மாதம் முழுவதும் நடைபெறவுள்ள இந்த பணியில் ஏற்பட்டுள்ள எல்லை குழப்பங்கள் மற்றும் வரைபட முரண்பாடுகளால், ஆசிரியர்களின் பணிநேரம்வீணாவதோடு அவர்கள் கடும் மன உளைச்சலுக்கும் ஆளாகி வருகின்றனர். இந்த குளறுபடிகளால் மக்கள் தொகை கணக்கெடுப்பு தரவுகளில் தவறுகள் ஏற்படவும், தகுதியான நபர்கள் விடுபடவும் வாய்ப்புள்ளது.

எனவே, இந்த விஷயத்தின் தீவிரத்தை உணர்ந்து, மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக இதில் தலையிட வேண்டும். கம்பம் நகராட்சி பகுதியில் நிலவும் மக்கள் தொகை கணக்கெடுப்பு பணி குளறுபடிகளை நேரடியாக ஆய்வு செய்து, ஆசிரியர்களின் குழப்பத்தை போக்கி கணக்கெடுப்பு பணி சுமுகமாகவும் துல்லியமாகவும் நடைபெற தகுந்த நடவடிக்கை எடுக்க வேண்டும்எனகோரிக்கை வலுத்து வருகிறது.





## புழலில்

# சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் உதயநிதியை கண்டித்து தவெக ஆர்ப்பாட்டம்

மாதவரம் சட்டமன்ற தொகுதி புழல் கேம்பில் திமுக சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதியை கண்டித்து திருவள்ளூர் தென்மேற்கு மாவட்ட கழக செயலாளரும் மாதவரம் சட்டமன்ற உறுப்பினருமான எம்.எல்.விஜய் பிரபு தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தின் போது, உதயநிதியின் பேச்சை கண்டித்து ஏராளமான பெண்கள் கண்டன கோஷங்கள் எழுப்பி, உதயநிதிக்கு பேச்சுக்கு கண்டனம் தெரிவித்து புழல் காவல் நிலையத்தில் மகளிர் அணியினர் புகார் அளித்தனர்.

இந்தப் போராட்டத்தில் தமிழக வெற்றிக் கழக மகளிர் அணியினர் நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் பலர் கலந்து கொண்டனர்.



### ஆடி கிருத்திகை பக்தி பரவசம்;
### 83ஆம் ஆண்டு புஷ்ப காவடி மகோற்சவத்தில்

# 148 காவடிகளுடன் முருக பக்தர்களை வழியனுப்பிய ஆர்.கே. அறக்கட்டளை தலைவர் மோகன் கிருஷ்ணா

தமிழ் மாதங்களில் மிகவும் புனிதமான மாதமாக போற்றப்படுவது ஆடி மாதம். இந்த மாதத்தில் முருகப் பெருமானை வழிபட்டால் வாழ்க்கையில் உள்ள தடைகள் நீங்கி, துணிவு, வெற்றி, மனநிம்மதி மற்றும் வளமான வாழ்வு கிடைக்கும் என்பது பக்தர்களின் உறுதியான நம்பிக்கையாகும்.

துன்பங்களைநீக்கி, பக்தர்களின் வேண்டுதல்களை நிறைவேற்றும் கருணைக்கடலாகவிளங்கும் கந்தன், தனது வேலால் தீமைகளை அழித்து நன்மைகளை அருள்புரிவார் என்று பக்தர்கள் நம்புகின்றனர். அதனால்தான், "வேல் உண்டு வினை இல்லை... மயில் உண்டு பயம் இல்லை..." என்ற நம்பிக்கை தலைமுறை தலைமுறையாக பக்தர்களின் இதயங்களில் நிலைத்து நிற்கிறது.

ஆடி கிருத்திகையை முன்னிட்டு கர்நாடகா, தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு பகுதிகளிலிருந்து ஆயிரக்கணக்கான பக்தர்கள் முருகப் பெருமானை தரிசிக்க பாதயாத்திரையாகவும், காவடி எடுத்தும், பால்குடம் சுமந்தும் தங்களது நேர்த்திக்கடன்களை நிறைவேற்றி வருகின்றனர்.

அந்த வகையில், கே. ஜி.எஃப் மாரிகுப்பத்தில் அமைந்துள்ள ஸ்ரீ வள்ளி தேவசேனா சமேத ஸ்ரீ சுப்பிரமணியர் ஆலயம் சார்பில், 83ஆம் ஆண்டு புஷ்ப காவடி மகோற்சவம் பக்தி பரவசத்துடன் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இந்த ஆண்டு நடைபெற்ற விழாவில் சுமார் 148 புஷ்ப காவடிகள் பக்தர்களால் எடுக்கப்பட்டு, முருகப் பெருமானின் திருவருளைப் பெறும் நோக்கில் ஆன்மிகப் பயணம்தொடங்கப்பட்டது.

அதிகாலை முதலே ஆலய வளாகத்தில் திரண்ட பக்தர்கள், விநாயகர் வழிபாட்டுடன் தங்களது யாத்திரையைத் தொடங்கி, பால்குடம், புஷ்ப காவடி உள்ளிட்ட பல்வேறு நேர்த்திக்கடன்களை பக்தி உணர்வோடு நிறைவேற்றினர்.

ஆலய வளாகம் முழுவதும் "அரோகரா... வேல் வேல் முருகன்..." என்ற பக்தி முழக்கங்கள் ஒலித்தன.

முருக பக்தர்களின் பக்தி, ஒழுக்கம் மற்றும் இறைநம்பிக்கை அனைவரையும் ஆன்மிக பரவசத்தில் ஆழ்த்தியது.

இந்த பக்தி நிறைந்த காவடி யாத்திரையில் சமூக சேவகரும், ஆர். கே. அறக்கட்டளையின் தலைவருமான திரு. மோகன்கிருஷ்ணா அவர்கள் கலந்து கொண்டு, காவடி எடுத்துச் செல்லும் அனைத்து முருக பக்தர்களையும் சந்தித்து வாழ்த்துகளைத் தெரிவித்தார்.

மேலும், 148 காவடிகளுடன் பங்கேற்ற பக்தர்கள் அனைவரின் யாத்திரையும் எந்தவித இடையூறும் இல்லாமல் பாதுகாப்பாகவும், வெற்றிகரமாகவும் நிறைவடைய வேண்டும் என்றும், முருகப் பெருமானின் திருவருள் அனைவருக்கும் கிட்ட வேண்டும் என்றும் அவர் மனமாரப் பிரார்த்தனை செய்தார்.

பக்தர்களுக்கு உற்சாகம் அளிக்கும் வகையில் அவர்களிடம் நேரில் உரையாடிய அவர், ஆன்மிகப் பயணங்கள் மனித வாழ்வில் ஒற்றுமை, ஒழுக்கம், தன்னம்பிக்கை மற்றும் இறைநம்பிக்கையை வளர்க்கும் என்றும், இதுபோன்ற புனித நிகழ்வுகள் சமூகத்தில் நல்லிணக்கத்தையும் சகோதரத்துவத்தையும் வலுப்படுத்துகின்றன என்றும் தெரிவித்தார்.

விழாவில் கலந்து கொண்ட பக்தர்கள், ஆர். கே. அறக்கட்டளையின் அன்பான வரவேற்புக்கும், வாழ்த்துகளுக்கும் நன்றி தெரிவித்து, முருகப் பெருமானின் அருளால் அனைவருக்கும் நலமும் வளமும் நிலைக்கவேண்டி பிரார்த்தனை செய்தனர்.

ஆடி கிருத்திகை என்பது வெறும் திருவிழா மட்டுமல்ல; அது பக்தி, பண்பாடு, ஒற்றுமை மற்றும் இறைநம்பிக்கையை ஒருங்கிணைக்கும் மகத்தான ஆன்மிக மரபாகும். ஆண்டுதோறும் நடைபெறும் இந்த புஷ்ப காவடி மகோற்சவம், ஆயிரக்கணக்கான பக்தர்களின் நம்பிக்கையையும், தமிழர் ஆன்மிகப் பாரம்பரியத்தையும் தொடர்ந்து எடுத்துரைத்து வருகிறது.

"வேல் உண்டு வினை இல்லை...

மயில் உண்டு பயம் இல்லை" – முருகன் அருளால் உலகநலன் வேண்டி பக்தி பரவசத்தில் நிறைவடைந்த 83ஆம் ஆண்டு புஷ்ப காவடி மகோற்சவம்!

### வேலைவாய்ப்பை உருவாக்கும் புதிய முயற்சி...

# இளைஞர்களின் திறனை உலக தரத்திற்கு உயர்த்த சென்னை வந்துள்ள 'சிறப்பு திறன் மையங்கள்"

## மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய பிரபு திறந்து வைத்தார்







வேலைவாய்ப்பை உருவாக்கும் புதிய முயற்சி... இளைஞர்களின் திறனை உலகத் தரத்திற்கு உயர்த்த சென்னை வந்துள்ள 'சிறப்பு திறன் மையங்களை" மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய பிரபு திறந்து வைத்தார்

இளைஞர்களின் தொழில்திறனை மேம்படுத்தும் நோக்கில், நிக்கோலா கல்வி மற்றும் ஆராய்ச்சி அறக்கட்டளை சார்பில் சென்னை மாநகரில் புழல் கதிர் வேடு பகுதியில் மூன்று 'சிறப்பு திறன் மையங்கள்' (CENTRES OF EXCELLENCE) தொடங்கப்பட்டுள்ளன.

இங்கு தங்கள் பள்ளி மற்றும் கல்லூரி படிப்பை பாதியில் நிறுத்திய மாணவர்களுக்கு அரசுடன் இணைந்து டூ வீலர் மெக்கானிக் ஃபோர் வீலர் மெக்கானிக் தொழிற்பயிற்சி இலவசமாக வழங்கப்பட்டு வருகிறது.

இதன் ஒரு பகுதியாக மின்சார வாகனங்கள் மற்றும் பேட்டரி தொழில்நுட்பம், ஆட்டோமொபைல் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் வாகன பரிசோதனை, எம்பெடெட் சிஸ்டம்ஸ், வாகன நெட்வொர்க் மற்றும் ECU டயக்னாஸ்டிக்ஸ் உள்ளிட்ட எதிர்கால தொழில்நுட்பங்களில் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு நேரடி செய்முறைப் பயிற்சி வழங்கப்பட உள்ளது.

இந்த மையங்களை மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய பிரபு திறந்து வைத்தார்.

தொழில்துறைக்குத் தேவையான திறன் கொண்ட மனிதவளத்தை உருவாக்கும் வகையில் இந்த மையங்கள் செயல்படும் என்றும், இளைஞர்களின் வேலைவாய்ப்பை அதிகரிப்பதே இதன் முக்கிய நோக்கம் என்றும் விழாவில் தெரிவிக்கப்பட்டது.

# உதயநிதி ஸ்டாலின் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டதை கண்டித்து கீழ்பென்னாத்தூரில் திமுகவினர் சாலை மறியல்

## 200க்கும் மேற்பட்டோர் கைது



தமிழக சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் காவல்துறை விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதை கண்டித்து, திருவண்ணா மலை மாவட்டம் கீழ்பென்னாத்தூரில் திமுகவினர் செவ்வாய்க்கிழமை சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். கீழ்பென்னாத்தூர் காவல் நிலையம் எதிரில் நடைபெற்ற இந்தப் போராட்டத்திற்கு முன்னாள் சட்டப்பேரவை துணைச் சபாநாயகர் கு. பிச்சாண்டி தலைமை வகித்தார். மாநில பொறியாளர் அணி செயலாளர் எஸ்.கே.பி. கருணா முன்னிலை வகித்தார். போராட்டத்தில் ஒன்றிய கழகச் செயலாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், பல்வேறு அணிகளின் பொறுப்பாளர்கள், கட்சி முன்னோடிகள், இளைஞரணி, மாணவரணி உள்ளிட்ட அமைப்புகளைச் சேர்ந்த 200க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு, உதயநிதி ஸ்டாலினுக்கு ஆதரவாகவும் காவல்துறையின் நடவடிக்கைக்கு எதிராகவும் கண்டன முழக்கங்களை எழுப்பி சாலை மறியலில் ஈடுபட்டனர். இதையடுத்து, போராட்டத்தில் ஈடுபட்ட அனைவரையும் போலீசார் கைது செய்து, அருகிலுள்ள திருமண மண்டபத்திற்கு அழைத்துச் சென்று தங்கவைத்தனர். இந்த சாலை மறியல் காரணமாககீழ்பென்னாத்தூர்காவல்நிலையம்முன்பகுதியில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது. பின்னர் போலீசாரின் நடவடிக்கையால் போக்குவரத்து சீரமைக்கப்பட்டது.

# திமுகவினர் சாலை மறியல், உதயநிதி ஸ்டாலின் கைதை கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்



தமிழக சட்டமன்ற எதிர் கட்சி தலைவர் உதயநிதி ஸ்டாலின் தஞ்சாவூரில் நேற்று முன்தினம் தமிழக முதல்வர் விஜய் அவதூறாக பேசியதாக கைது செய்யப்பட்டார் இதனை கண்டித்து திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு அண்ணா சிலை முன்பு திமுக முன்னாள் எம் எல்ஏ ஓ ஜோதி தலைமையில் சாலை மறியலில் ஈடுபட்டவர்களை செய்யாறு டிஎஸ்பி மீனாட்சி சுந்தரம் தலைமையிலான போலீஸார் கைது செய்து தனியார் திருமண மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டனர்.

### ஓட்டப்பிடாரம் காசி விஸ்வநாதர் கோவிலில் ஆடிப்பெருக்கை முன்னிட்டு

# மக்கள் போற்றும் முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் தவெக ஆட்சி மூலம் உலக சாதனை படைக்க வேண்டும்

## வடக்கு ஒன்றிய செயலாளர் ATK.ஆறுமுக கிருஷ்ணன் காசி விஸ்வநாதருக்கு சிறப்பு வழிபாடு செய்தார்



ஓட்டப்பிடாரம் காசி விஸ்வநாதர் கோவிலில் ஆடிப்பெருக்கை முன்னிட்டு மக்கள் போற்றும் முதலமைச்சர் ஜோசப் விஜய் தலைமையில் தவெக ஆட்சி மூலம் உலக சாதனை படைக்க ,வடக்கு ஒன்றிய செயலாளர் ATK.ஆறுமுக கிருஷ்ணன் காசி விஸ்வநாதருக்கு சிறப்பு வழிபாடு செய்தார்

தமிழக மக்கள் போற்றி வாழ்த்தும் வகையில் முதல் பட்ஜெட்டை தாக்கல் செய்யப் போகும் முதலமைச்சர் ஜோசப் விஜய் நல்லாட்சி இன்னும் 50 ஆண்டுகள் தமிழகத்தில் தொடரவும் சிறு குறு தொழில்துறை அமைச்சர் மதன் ராஜா மக்கள் பணி சிறக்கவும் ஒட்டப்பிடாரம் காசி விஸ்வநாதர் கோவிலில்

ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயலாளர் ATK ஆறுமுககிருஷ்ணன், தலைமையில் தவெகவினர் சிறப்பு வழிபாடு செய்தனர்,

அதன் பின்னர் இனி தமிழகத்தில் 50 ஆண்டுகள் தமிழக வெற்றி கழகத்தின் சார்பில் நல்லாட்சி தரப்போகும்தமிழகமுதலமைச்சர் ஜோசப் விஜய், 100 வயது வரை பல்வேறு சிறப்புகள் பெற்று வாழ்ந்திட அவர் பெயரில் சிறப்பு பூஜைவழிபாடு செய்து அனைவருக்கும் இனிப்புகள் வழங்கப் பட்டன

இந்நிகழ்ச்சியில் A.தெய்வேந்திரன் (பாஞ்சை இந்திராநகர் கிளை செயலாளர் ), ஜெயசீலன் (ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயற்குழு நிர்வாகி ) G. ராதாகிருஷ்ணன் (ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய செயற்குழு உறுப்பினர்) M.கார்த்திக்ராஜா (ஓட்டப்பிடாரம் வடக்கு ஒன்றிய மாணவர் அணி துணை செயலாளர்) உட்பட ஏராளமானோர் கலந்து கொண்டனர்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் ஆடிதிருவிழா பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கல்



மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் பாடியநல்லூர் ஊராட்சி மொண்டியம்மன் நகர் முத்துமாரியம்மன் கோயில் தெருவில் அமைந்துள்ள அருள்மிகு ஸ்ரீ முத்துமாரியம்மன் ஆலயத்தில் 11ஆம் ஆண்டு ஆடிமாத திருவிழாவை முன்னிட்டு வேல்பால் நிலையம் உரிமையாளரும் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி துணை செயலாளருமான சாமிவடிவேல் கலையரசிகுடும்பத்தினர் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சி சிறப்பாக நடைபெற்றது. நிகழ்ச்சியில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம் செய்து பின்னர் வண்ண மலர்களால் அலங்காரம் செய்யப்பட்டு மஹாதீபாராதனை காண்பிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து சிறப்பு அழைப்பாளர்களாக அதிமுக மாவட்ட செயலாளர் மாதவரம் வி.மூர்த்தி, முன்னாள் பொன்னேரி சட்ட மன்ற உறுப்பினர் சிறுனியம் பி.பலராமன் ஆகியோர் கலந்துகொண்டு ஆலய நிர்வாகிகள் முன்னிலையில் சுமார் 2000க்கும் மேற்பட்ட சுற்றுவட்டார பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானத்தை துவக்கி வைத்தனர்.

இதில் அதிமுக நிர்வாகிகள் கார்மேகம், மனோகரன், மாணிக்கம், பாலா, ஆனந்த், இளங்கோவன், அரி, ஜெகன், வேலாயுதம், காசி, பாலகணேசன், கண்ணன், சுரேஷ், ராஜா, உலகநாதன், பிரகாஷ், பரமசிவம், உள்ளிட்ட அதிமுக மகளிரணி நிர்வாகிகள் பலரும் கலந்துகொண்டனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA